# சூத்திரம்

www.sooddram.com

The Formula

செய்திகள் | கட்டுரைகள் | வடக்கு கிழக்கு மாகாணத்தில் | எழுத்துரு | **Contact us at: sooddram@gmail.com**

~~ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது! ஜனநாயக~~

**சூத்திரம்**
- முதற்பக்கம்
- FONTS/எழுத்துரு
- சர்வதேச நேரம்
- தொடர்புகளுக்கு

**கட்டுரைகள்**
- பொதுவிடயம்
- அரசியல் சமூக ஆய்வு
- இலங்கைத் தமிழர் போராட்டம்
- இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புகள்
- சர்வ தேச அரசியல்
- அரசியல் தீர்வு

**கவிதைகள்**
- சமூக விழிப்பு
- போராட்டம்
- பொது விடயம்

**புகைப்படங்கள்**
- எமது வாழ் நிலங்கள்
- போராட்டங்கள்
- போராட்ட தடயங்கள்

**இணையத்தளங்கள்**
- கண்ணோட்டம்
- பூந்தளிர்
- தூ
- தேனி

## 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

***நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 29)***

(கிறேசியன், நாவாந்துறை)

சொல்லடா, சொல்லடா என்று தண்ணீரை ஊற்ற எனக்கு மூச்சுத் திணர்தலைத் தவிர எதுவும் செய்ய முடியவில்லை. மார்பில் ஒருவரும், வயிற்றில் ஒருவருமாக மிதிக்கின்றனர். ஒருவர் நாடியைப் பிடித்த பிடி சற்றும் தளர்வதாகத் தெரியவில்லை...

மூக்கினுள் ஊற்றப்படும் தண்ணீர் மீண்டும் சுவாசக் குழாயை அடைக்க மூச்சுத் தினறல் ஏற்பட்டு தலை மற்றும் மார்புப் பகுதிகளில் வலி ஏற்பட்டது. நான்கு பேர் சேர்ந்து செய்யும் இந்தக் கொடுமையை எப்படிப் பலவீனமானவர்கள் உடலை உடையவர்கள் தாங்கினரோ தெரியவில்லை! கண்டிப்பாக இறந்திருப்பார்கள். அப்போது தான் நினைத்தேன் அடி, சித்திரவதை தாங்க முடியாமல் அவர்களது குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதாகக் ஜோன்சன் கூறியதில் எவ்வளவு உண்மை உள்ளதென்று.

இவர்கள் செய்யும் கொடுமைகளை விட நான் இறந்து போவது மேல் என்று தோன்றியது. ஆனால் எப்படி இறப்பது? நாடியை மேல் நோக்கி இழுப்பதால் கழுத்துப் பிய்ந்து விடும் போல இருந்தது. நெஞ்சின் மேல் நின்ற மஞ்சு ஒரு காலால் கழுத்திலும் மிதித்தார், சொல்லடா, எங்க இருக்கு ஆயுதம்? என்னடா தொடர்பு ஈ.என்.டி.எல்.எப். உடன்? எங்க வச்சிருக்கிறாய் காசு? இவர்களது கேள்விக்குப் பதில் சொல்லக் கூடிய விதத்திலா என்னை வைத்திருந்தனர்?

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**“அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

என்னைப் போன்றே பிணைக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். தோழர் அருகில் மல்லாந்து படுத்தபடி எனக்குச் செய்யும் கொடுமைகளைக் கண்டு மிரண்டு முழிகள் பெரிதாக ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார். அடுத்து தனக்கு என்று அப்போது அவருக்கு தெரிந்திருக்கும். அதனால் அவர் ஓர் விறைப்புடன் எனக்குச் செய்யப்படும் கொடுமைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மார்பு எலும்புகள் உடைந்துவிடுமோ என்ற பயத்தினால் கூடியவரை தம்கட்டி, உடையாமல் இருக்க உடலை இறுக்கி அனைத்துச் சக்திகளையும் மார்புக்குச் செலுத்தியிருந்தேன். மார்பில் நின்று கொண்டிருந்த மஞ்சு கால் தவறி (வழுக்கி) கீழே விழுந்தார். அப்படி விழுந்தவர் எழுந்து இரு கைகளாலும் எனது மார்புப்பகுதியை அமர்த்தினார். சின்னக்கேடி வயிற்றின் மேல் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தார். தொடர்ந்து அவரால் வயிறறின் மேல் நிற்க முடியவில்லை.

மண்வெட்டிப் பிடி போன்ற ஓர் கட்டையால் எனது இரண்டு தொடைகளிலும் அடித்தார் சின்னக்கேடி. அப்படி அடிக்கையில் ஒரு அடி எனது ஆண் உறுப்பிலும், விதையிலும் பட்டது. ஒரு பக்கம் மூச்சை அடைக்கச் செய்துகொண்டிருந்தனர். மறுபக்கம் கீழ்ப் பகுதியைத் தாக்கினர். எனக்கு எந்த வலியைத் தாங்குவதென்று தெரியவில்லை. உயிர் பிரிந்து விட்டது என்று நினைத்தேன். நான் ஏற்கனவே பாதி கிழிந்த சறத்தைத்தான் உடுத்தியிருந்தேன். அந்தச் சறம் இவர்கள் மிதிக்கும் போது மேல்நோக்கி வந்துவிட்டது. அந்த வதை முகாமில் இருந்த எங்கள் அனைவரது உள்ளாடைகளையும் (அண்டவெயர்) புலி விலங்குகள் பறித்துவிட்டனர். அனைவரும் உள்ளாடை இல்லாமல்தான் இருந்தோம் அங்கே! எனது விதையில் பட்ட அடியின் வலிக்காக நான் இன்றுவரை சிகிச்சைப் பெற்று வருகிறேன். இரத்தக் கட்டி கான்சராக மாறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர் சொன்னார். அதனால் தொடர்ந்து மருந்து எடுத்து வருகிறேன்.

எனது சறம் மேல்நோக்கி வந்ததும் சின்னக் கேடி சொன்னார். டே இங்கபாரடா இவன்ர இதை, (பச்சையாகத் தூசண வார்த்தையைச் சொன்னார். நான் அந்த வார்த்தையை இங்கு பயன்படுத்தவில்லை) என்று கூறி வாளியிலிருந்த தண்ணீரை எடுத்து எனது ஆண் உறுப்பின் மேல் ஊற்றினார். இந்த நேரத்தில் கூட எனது மூக்கினுள் தண்ணீர் விடுவதை அவர்கள் நிறுத்தவில்லை.

நேராக தண்ணீரை மூக்கினுள் விட்டிருக்கலாம், எதற்காக துணியைப் போட்டு அதன் மேல் தண்ணீரை ஊற்றி மூக்கினுள் போகும் படி செய்கின்றனர் என்பது புரியாமல் இருந்தது. சற்று நேரத்துக்குப் பின்னர்தான் அதன் ரகசியம் தெரிந்தது. நேரடியா தண்ணீரை ஊற்றினால் அந்தத்

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………”

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

[***இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!***](#)
[நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?](#)

தண்ணீர் புலி விலங்குகளின் முகங்களில் தெறிக்கும். அது அவர்களை நனைத்துவிடும், அவர்களுக்கு அது அருவருப்பாக இருக்கும். துணியைப் போட்டு ஊற்றினால் நாம் மூக்கினால் பலமாகச் சீந்தும் தண்ணீர் துணியில் பட்டுத் தடைபடும். அது அவர்கள் முகங்கள் மீது தெறிக்காது. இதை அவர்கள் அனுபவ பூர்வமாகக் கண்டுதான் துணி போடும் வித்தையைப் பயன்படுத்தத் தொடங்கினர், இதுதான் முகத்தில் துண்டுபோடும் இரகசியமே தவிர வேறில்லை!

எனக்கு வயிற்றிலும் நெஞ்சிலும் மிதித்தவைதான் வலியை ஏற்படுத்தின. மூக்கினுள் தண்ணீர் விடுவது வலியில்லை, மூச்சுத் திணறல்தான். ஆனால் வலியைவிட இது மரணத்தின் வாசலை எட்டிப்பார்க்கும் சிக்கலான ஓர் தருணம். இரண்டாவது தடவையும் அவர்கள் களைப்படைந்து, வெறுப்படைந்து தண்ணீர் விடுவதை நிறுத்தி, ‘‘சொல்லடா, தெரியுமா’’ என்று கேட்டனர். எனக்கும் ஓர் ஓய்வு தேவைப்பட்டது. அதனால் ஓம் தெரியும் என்றேன். ஆ! விலத்து என்று சொல்லிக்கொண்டு கௌதமன் என் முகத்துக்கு நேரே நின்று கொண்டு, ‘‘சொல்லடா’’ என்றார்!

மூக்குத், தொண்டை, இருதயக்குழாய் இப்படி அனைத்துப் பகுதியினுள்ளும் தண்ணீர் புகுந்திருந்தது. மூக்கைச் சீறி, தும்மி தண்ணீரை வெளியே அனுப்பிவிட்டு, சற்று நிதானமாக மூச்சை உள்ளே இழுத்துவிட்டு, சொன்னேன், ‘‘எனக்கு ஒன்றும் தெரியாது’’ என்று. கௌதமனுக்கு மீண்டும் கோபம் வந்தது. ‘‘கொண்டுவாடா அந்த அலவாங்கை, இவனை ஒரே குத்தாய் குத்தி கொண்டுவிடவேண்டியதுதான்’’ என்றார். ஆனால் யாரும் அலவாங்கை எடுத்து வந்து கொடுக்க வில்லை. சுற்றும் முற்றும் பார்த்தேன் எனது கண்களிலும் அலவாங்கு எதுவும் தென்படவில்லை!

‘‘டே, திரும்பவும் ஊத்தடா தண்ணீயை’’ என்றார் கௌதமன். மீண்டும் ஆரம்பித்தனர். இப்போது சின்னக்கேடி எனது மார்பை இருகைகளாலும் பலமாக அமத்தினார். மஞ்சு ஓர் கட்டையை எடுத்து எனது உள்ளங்காலிலும், தொடைகளிலும் அடிக்க ஆரம்பித்தார். துண்டை முகத்தில் போட்டு தண்ணீர் ஊற்றினார் பெயர் தெரியாத புலி விலங்கொன்று! அதே மூச்சுத் திணறல் மீண்டும். மூச்சு திணறலை சமாளிக்க எந்த வழியும் தெரியவில்லை. எனது கைகளைப் பலங்கொண்ட மட்டும் உள்நோக்கி இழுத்தேன் கை விலங்குகள் அண்டுவதன் மூலம் வலி அதிகரித்ததால் முகத்தில் ஏற்படும் வலி வேதனை இடம் மாறிக் கைகளுக்குச் செல்லும்,

எனவே நானாகவே வலியை இடம்மாற்றம் செய்ய முயற்சித்தேன்! எனக்கும் அதிக களைப்பு ஏற்பட்டபடியால் தண்ணீர் தொண்டைக்குள் சென்றதும் ஆடு, மற்றும் கோழிகளின்

(சாகரன்)

**வெல்லப்போவது யார்....? பாராளுமன்றத் தேர்தல் 2010**

(சாகரன்)

***பாராளுமன்றத் தேர்தல் 2010***

**தேர்தல் விஞ்ஞாபனம் -**
***பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி***

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

***நடந்த வன்கொடுமைகள்!***
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

***‘‘ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்.’’***
**வெகு விரைவில்...**

**மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்**

(சாகரன்)

***இலங்கையில்***

**‘இராணுவ’ ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்**

(சாகரன்)

***ஜனாதிபதி தேர்தல்***

**எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?**

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

***ஜனாதிபதித் தேர்தல்***

கழுத்துக்களை நெரிக்கும் போது எற்படும் சத்தம் போன்று எனது வாய் மூக்கு வழியாக அது போன்ற சத்தங்கள் வெளியாயின. இப்போது அனைவரும் சேர்ந்து கேட்கின்றனர், ‘சொல்லடா, சொல்லடா’’ என்று.

எதை நான் சொல்வது? நான் ஈ.என்.டி.எல்.எப். இயக்கத்தில் இருந்ததை தவிர வேறு எதுவும் “ஓம்’’ என்று சொல்வதற்கில்லை. மூன்றாவது தடவை குறைந்தது மூன்று நிமிடங்கள் வரை செய்ததையே மீண்டும் மீண்டும் செய்தனர். நானும் அதே போன்று மூக்கினுள் வரும் தண்ணீரை எனது சக்தியைக் கொண்டு வெளியே சீறித் தள்ளிக் கொண்டே இருந்தேன். அவர்கள் களைப்படைந்திருந்ததால் நாடியைப் பிடித்து இழுத்து கொண்டிருந்தவர் சற்று தளர்ச்சியகப் பிடித்திருந்ததால் தண்ணீரை வெளியே தள்ளக் கூடியதாக இருந்தது. சற்றுத் தளர்ந்ததும் சொன்னேன், தெரியும் சொல்கிறேன் என்று.

இப்போது எல்லோரும் நிறுத்தினர், களைத்திருந்தபடியால் அனைவரும் தண்ணீர் குடித்தனர். சின்னக் கேடி சொன்னார், ‘இவன் இப்படித்தான் சொல்லுவான், திருப்பிக் கேட்டால் தெரியாது என்று சொல்வான்’’ என்றார். இவங்களை எல்லாம் வச்சிருக்கக் கூடாது. போட்டிட வேணும்! என்றார் மஞ்சு. சற்று நேரத்தில் கௌதமன் என் அருகில் வந்து நிலத்தில் குந்திக் கொண்டு இருந்தார். கிறேசியன், சொல்லு! நீ சொன்னால் பிரச்சினை இல்லை! சொல்லாமல் விட்டால்தான் சித்திரவதை செய்வம். அதனால பயப்படாமல் சொல்லு என்றார்.

முதலில் இருந்த வீரியம் குறைந்து, இப்போது இரைந்து கேட்க ஆரம்பித்தார். நானும் நிதானமாச் சொன்னேன், அண்ண! நீங்கள் இப்படிக் கொடுமைப் படுத்திற படியால்தான் ஓம் என்று சொல்கிறேன். எனக்கு உண்மையில் அவர்கள் எங்கே ஆயுதங்களை வைத்துவிட்டுச் சென்றனர் என்பது தெரியாது. உங்களுடைய அடியைத் தாங்க முடியாமல்தான் தெரியும் என்று சொல்கிறேன். நான் சொல்வது உண்மை. இதையும் நீங்கள் நம்பாமல் தொடர்ந்து இப்படிச் சித்திரவதை செய்தால் நான் சாவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. ஆதலால் சித்திரவதை செய்யாமல் என்னைக் கொன்றுவிடுங்கள், பெரிய அளவில் நோகாமல் கொன்றுவிடுங்கள் என்று அவருக்குப் புரியும்படியாகச் சொன்னேன்.

கௌதமன் இப்போது தெரிந்து கொண்டார் என்னிடமிருந்து இனிமேல் எதையும் எடுத்துவிட முடியாது என்பதை! சற்று யோசித்தவர் தள்ளிச் சென்று ஏனையோரிடம் சிறிது நேரம் கதைத்தார். நான் தலையைத் திருப்பி அவர்களைப் பார்க்காதது போல் கவனித்துக் கொண்டிருந்தேன். கூடி நின்று கதைத்த அவர்களது பார்வை என்மீது பதிந்து பின்னர், ஈ.பி.ஆர்.எல்.எப். தோழர் மீது பதிந்தது.

**ஆணை இட்ட அதிபர் ‘கை’, வேட்டு வைத்த ஜெனரல் ‘துப்பாக்கி’ ….. யார் வெல்வார்கள்?**

(சாகரன்)

**சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.**

(சேகர்)

**அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.**

(அ. வரதராஜப்பெருமாள்)

***தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு***

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?**

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

**விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்….?**

(மோகன்)

**2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!**

***‘ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்’***

(சாகரன்)

***சபாஷ் சரியான போட்டி.***

**மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.**

எனக்கு அப்போதே புரிந்தது ஈ.பி.ஆர்.எல்.எப். தோழர் மீது தங்கள் கைவரிசையைக் காண்பிக்கப் போகின்றனர் என்று.

என் மீது ஏறக்குறைய மூன்று வாளித் தண்ணீர்வரை ஊற்றியிருந்தனர். நிலத்தில் கொட்டிய நீர் மண்ணைச் சேறும் சகதியுமாக்கி செம்பாட்டு நிறத்தில் நனைந்திருந்தது. உடல் முழுவதையும் முதுகு முழுவதும் ஈரமாகி தண்ணீரில் ஊறியது. மறுபக்கம் திரும்பி ஈ.பி.ஆர்.எல்.எப் தோழரைப் பார்த்தேன். அவருக்கும் தெரிந்திருந்தது தனது முறை நெருங்கிவிட்டது என்று. என்னை அனுதாபத்துடன் நோக்கினார். என்மீது அனுதாபப்பட்ட அவர் தன்னுடைய சித்திரவதைக்குத் தயாரானார். எனது அருகில் வந்த மஞ்சுவும், சின்னக்கேடியும் என்னை முறைத்துப் பார்த்தனர். சின்னக் கேடி மண்வெட்டிப் பிடி போன்ற ஓர் கட்டையை எடுத்து தனது தலைக்கு மேலாக ஓங்கி எனது முகத்துக்கு நேரே அடிக்க வந்தார். ஆனால் அடிக்கவில்லை. அந்த அடி எனது முகத்தில் பட்டிருந்தால் எனது முகம் பாதிக்கு மேல் உள்ளே போயிருக்கும். அவர் தனது வெறுப்பை அவ்விதம் மிரட்டிக் காண்பித்தார். அவருக்கு அதில் ஓர் திருப்தி ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் தோழரது முகத்தில் துணியைப் போட்டனர்.

(தொடரும்...)

(யஹியா வாஸித்)

**கூத்தமைப்பு கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!**

(சதா. ஜீ.)

***தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை***

மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?

(சாகரன்)

**கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்**

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி

(சாகரன்)

பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!

(மோகன்)

***தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு***

பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்

(சாகரன்)

இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்

சாகரன்

ஈழ விடுதலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும்

- சாகரன்

*[அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே](#)*

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

[வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா?](#) - சாகரன்

*[ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!](#)* - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com